2012 ஏப்ரல் 17]

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையை ஏற்று, அனைத்துத் தொண்டர்களும் அந்தப் பணியைச் செய்தார்கள்.

நம்முடைய அரசின் சார்பில், சென்னை நகரம் மற்றும் அதனையொட்டியிருக்கிற பகுதிகளில், குறிப்பாக, I.T.Park–களில் வேலை செய்கிற இளைஞர்களிடம் இதுகுறித்த உற்சாகத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்துகின்ற வகையில், இரத்தம் கொடுத்து உயிர் காக்கிற பணிக்காக நடமாடும் இரத்ததான வங்கிகளை இந்த அரசு ஏற்படுத்தித் தருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Mobile Blood Bank குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வேண்டிய பதிலையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். இன்றைக்கு இரத்த அளவின் தேவையைக் கருத்தில்கொண்டு, வட்டார மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு மையங்களைத் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மற்றும் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மையத்தின்மூலமும் 17 இரத்த பரிமாற்ற ஊர்திகள் –Blood Transmission Vans வழங்கப்பட்டுள்ளன. இந்த ஊர்திகளின்மூலம் இரத்தம் தேவைப்படும் இடத்திற்கு, தேவையான அளவிற்குக் கொண்டு செல்லப்படுகிறது. மேலும், இதன்மூலம் இரத்த தானம் பற்றிய விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

110—

குடமுழுக்கு

***5579—திரு. கே. குப்பன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூரிலுள்ள தியாகராஜ சுவாமி கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சென்னை, திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலுக்குக் கடந்த 6–7–1998 அன்று குடமுழுக்கு நடைபெற்றது. தற்போது 12 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், திருப்பணிகள் செய்து, குடமுழுக்கு செய்ய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதனைத் தொடர்ந்து, 25–4–2012, புதன்கிழமை அன்று பாலாலயம் செய்யப்பட்டு, திருப்பணி வேலைகள் தொடங்கப்படவுள்ளன. இதற்குத் துறையின் சார்பில் 61.60 இலட்சம் ரூபாய் மற்றும் 13–வது நிதி ஆணையத்தின் சார்பில் 45.80 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளன. மேலும், சன்னதியில் வேலைகள் உபயதாரர்கள்மூலம் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனைத்து திருப்பணிகளும் 2013 மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் குடமுழுக்கு நடத்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.*

2012 ஏப்ரல் 17]

திரு. கே. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா என்றால் 'அன்பு'; மாண்புமிகு அம்மா என்றால் 'அறிவு'; மாண்புமிகு அம்மா என்றால் 'துணிவு'; மாண்புமிகு அம்மாவே எங்களுக்கு 'வாழ்வு'. மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, நன்றி கூறிக்கொள்கிறேன். திருவொற்றியூர் தியாகராஜ சுவாமி திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்தப்படும் என்று அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தக் குடமுழுக்கினை நடத்துகின்ற நேரத்தில், தியாகராஜ சுவாமி திருக்கோயிலுக்குள் உள்ள திருக்குளம், பக்தர்களுடைய பயன்பாட்டிற்கு உபயோகம் இல்லாமல் இருக்கின்றது. ஆகவே, பக்தர்களின் பயன்பாட்டிற்கு ஏதுவாக, அந்தக் குளத்தைச் சீரமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திருக்கோயிலில் இரண்டு திருக்குளங்கள் உள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, மேற்படி குளத்தினைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தப் பணிகள் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்களால், கடந்த 26–12–2011 அன்று தொடங்கப்பட்ட திருவொற்றியூர் நகராட்சியின்மூலம், ரூபாய் 3.20 இலட்சம் செலவில், 30 நாட்களில் சீரமைக்கப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதுதவிர, திருக்குளத்தில் உள்ள நான்கு ஆழ்துளைக் கிணறுகளைச் சீரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுதவிர, களிமண் படுகை மற்றும் இதர நீர் சேகரிப்பு நடவடிக்கைகளோடு, குளத்தில் நீரை நிரப்பி, தெப்பத் திருவிழா நடத்துவதற்கும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருக்குளத்தின் நான்கு புறமும் உள்ள படிகளில் சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.

திரு. கே. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தியாகராஜ சுவாமி திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்துவதற்கும், திருக்குளத்தைச் சீர் செய்வதற்கும் உத்தரவிட்டுள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் வணங்கி, நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரில் அமைந்திருக்கக்கூடிய பிரசித்திபெற்ற திருவப்பூர் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்திற்குத் தங்கத் தேர் அமைத்துக் கொடுத்து, குடமுழுக்கு விழாவினை மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் நடத்திட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தத் திருக்கோயிலில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. தங்கத் தேர் அமைப்பதற்கான பணிகளில், தங்க உபகரணங்கள் துறையின் சார்பாக வழங்கப்பட இயலாமையால், உபயதாரர்கள் முன்வந்தால், மேற்கொண்டு தங்கத் தேர் அமைக்கும் பணியினை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்து தரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*